

ஆலந்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மிசா ம.ஆபிரகாம் அவர்களின் 36வது நினைவு நாளை முன்னிட்டு அவரது இல்லத்தில் உள்ள திருஉருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மரியாதை செய்து தொடர்ந்து நடைபெற்ற நினைவு பேரணியில் கலந்துகொண்டார். அருகில் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் பி.குணாளன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி திட்டக்குடி நகரத்தில் தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாமை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் திட்டக்குடி நகர மன்ற துணைத் தலைவர், நகர கழக செயலாளர் வி.பி.பி.பரமகுரு, மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் பட்டூர் வீர. அமிர்தலிங்கம், நகர மன்ற தலைவர் வெண்ணிலா கோதண்டம், மாவட்ட பிரதிநிதி செந்தில்குமார் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### மாவட்டசெயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எஸ்.தனசேகர் தலைமை! மனிதநேய உதய நாள்!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் திருமதி. கீதாஜீவன் - இரா.கிரிராஜன் எம்.பி. வழங்குகின்றனர்!

சென்னை, நவ.3-

சென்னை கிழக்கு மாவட்டம், தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாள், உதயம்8 நிகழ்ச்சியாக "தாய்மை நலம் காப்போம்! தமிழர் நிலம் காப்போம்! எனும் தலைப்பில் 04.12.2023 திங்கள்கிழமை அன்று காலை 9.00 மணியளவில், காமராஜர் திருமண மண்டபம், திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.தனசேகர் தலைமை வகிக்கின்றார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கொளத்தூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி., கே. சந்துரு, சரிதா மகேஷ்குமார் எம்.சி., டி.லோகேஷ், தேவஜவஹர், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரை கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை திருமதி.கீதாஜீவன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் மற்றும் கழக சட்டதிட்ட திருத்தக் குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர், மேயர். பிரியாராஜன், கழக அயலக அணித் தலைவர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி., ப.ரங்கநாதன் முன்னாள் எம்.எல்.ஏ.,

கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: யோகபிரியா தனசேகர் எம்.சி., பி.அமுதா பொன்னிவளவன் எம்.சி., சி.ஸ்ரீதணி எம்.சி., கே.சாரதா எம்.சி.,

கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: பி.பழனி, இளா. இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எஸ்.டி.தாமஸ், இரா.தயாளன், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி.

கொளத்தூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பி.பொன்முடி, பி.ஊமைதுரை, பி.டி.சி.ரவி, ப.அன்பரசு, டி.சந்திரசேகர், கே.பி.ஆதவன்மணி, எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி, என்.ராமச்சந்திரன், எம்.டி.தமிழ்செல்வன், செ.முருகன், என்.சௌந்தரராஜன்

கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: எஸ்.டி.பாஸ்கர், க.விஜயரங்கம், எஸ்.முரளி, கே.சந்தானம், எம்.துளசி, எஸ்.பி.சதிஷ்பாபு, பி.வெங்கடேசன், வி.செல்வம், ஜி.பொன்னிவளவன், சி.சந்திரசேகர், புரசை ஜி.ராமகிருஷ்ணன், பொன்புகழேந்தி, ஆர்.ஆரோக்கியதாஸ், எம்.நாகராஜ், அ.கன்னியப்பன், டி.எ.ராஜன், ஆர்.மோகனசுந்தரம், எஸ்.சம்பத்குமார், ஜெ.சரவணன், என்.ரவிசந்திரன், ஆர்.சொக்கலிங்கம், எஸ்.நாகராஜன், எ.எம்.ராஜசேகர், ஆர்.ஜெ.வெங்கடரமணமூர்த்தி ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கி ன்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதி துணை செயலாளர் எம்.தாவுத்பீ மற்றும் 67அ வட்ட கழக செயலாளர் கே.ஜார்ஜ்குமார் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

### ரூ. 305 கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

# சிவகங்கையில் - தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு!

## கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சிவகங்கை, டிச. 3 -

சிவகங்கை மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் சிவகங்கை தனியார் திருமண மண்டபத்தில் உலக முதலீட்டாளர்கள் தொழில் மாநாடு மாவட்ட ஆட்சியர் ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தேர்தல் வாக்குறுதியின் போது 505 வாக்குறுதிகளை அறிவித்தார். அதில் 85% சதவிகித வாக்குறுதிகளை இரண்டரை ஆண்டுகளில் நிறைவேற்றி உள்ளார்.

இது தவிர அறிவிக்காத புதிதாக பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து அதனை செயல்படுத்தி வருகிறார். கல்வி, விவசாயம், தொழில் ,ஆகிய மூன்று துறைகளுக்கு தனி கவனம் செலுத்தி வருகிறார். இத்துறைகள் வளர்ச்சி அடைய அதற்கான நிதியினை ஒதுக்கி வருகிறார். பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக தமிழகம் விளங்கி வரும் வகையில் முதல்வர் தலைமையில் தமிழகம் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக படித்து விட்டு வேலை வாய்ப்பின்றி உள்ள இளைஞர்கள் வேலைவாய்ப்பினை வழங்கிடவும் அவர்களை சுய தொழில் துவங்கிட ஊக்கப்படுத்தும் வகையிலும் பல்வேறு திட்டங்களை தீட்டி அதனை செயல்படுத்தி வருகிறார். முதல்வரின் லட்சியமாக 2030 ஆம் ஆண்டில் தமிழகம் நம்பர் ஒன் ட்ரில்லியன் அமெரிக்கா டாலர் மதிப்பிலான பொருளாதார ரீதியில் உயர்த்திடும் வகையில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஜனவரி 7,8 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது .இதன் தொடர்பாக மாவட்டந்தோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே 2வது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ் நாடு திகழ்ந்து வருகிறது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சி களை முதல்வர் வழிகாட்டுதலின் படி சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழில்களின் முக்கிய நகரமாக திகழ வேண்டும் என்று முதல்வர் விருப்பத்தின் பேரில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. சென்னையில் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள்மாநாடு குறித்து ஒவ்வொறு மாவட்டத்திலும் இத்தகைய மாநாடுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் சிவகங்கை மாவட்டத்திற்கு ரூ. 300 கோடியில் புரிந்துனர்வு ஒப்பந்தம் நிர்ணயிக்கப்பட்டது. தற்பொழுது ரூபாய் 305 கோடியில் புரிந்துனர்வு ஒப்பந்ததங்கள் பெறப்பட்டுள்ளது. இதன்மூலம் 3162 புதிய வேலைவாய்ப்புகள் மாவட்டத்தில் உருவாகும். இத்தகைய தொழில் முதலீட்டாளர் மாநாட்டினை இளைஞர்கள் சுயதொழில் நடத்த விரும்புகிறவர்கள் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. வாழ்த்திப் பேசினார். மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் கணேசன் வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, சிவகங்கை ஒன்றிய குழுதலைவர் மஞ்சுளா பாலச்சந்தர், நகர்மன்ற துணைத்தலை வர் எம்.கார்கண்ணன், மாவட்ட கவுன்சிலர்கள் ஏடி.என் ரவி, சாந்தா சகாயராணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் மாவட்ட அளவிலான சிறு, குறு, தொழில் நடத்தும் தொழிலதிபர்கள், பயனாளிகள் கலந்து கொண்டார்கள்.

### புயல் எச்சரிக்கை: சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## மண்டல அலுவலர்களுடன் மேயர் பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச. 3-

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், வங்கக்கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் குறி த்தும் மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுடன் காணொலி வாயி லாக ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (02.12.2023) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒவ்வொரு மண்டலத்திலும் மழை மற்றும் எதிர்வரும் புயல் தாக்கத்தினை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை, பாதுகாப்பு மற்றும் களப்பணி நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு மேயர் அவர்கள் ஆய்வு செய்து, மழையின் காரணமாக தேங்கும் மழைநீரை உடனுக்குடன் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், போதுமான பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், அனைத்து அலுவலர்களும் கூடுதல் கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வுடன் பணியாற்றிட வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு மேயர் அறிவுறுத்தினார்.

செய்தியாளர்கள் சந்திப்பில் மேயர் பேசியதாவது:

வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கனமழை மற்றும் மிக கனமழையும் பெய்துள்ளது. கடந்த 21.11.2023 அன்று இரவு 7 மணி முதல் 9 மணி வரை 14 செ.மீ. முதல் 20 செ.மீ. வரை மழை பதிவாகியுள்ளது.

**முதல்வரின் அறிவுரை!**

முதலமைச்சர் 30.11.2023 அன்று காலை ரிப்பன் கட்டடத்திற்கு நேரடியாக வருகைபுரிந்து ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு மற்றும் களப்பணி நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இதுகுறித்த ஆய்வுக்கூட்டமும் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டு, பருவமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

02.12.2023, 03.12.2033, 04.12.2023 மற்றும் 05.12.2023 ஆகிய 4 நாட்களுக்கு மழைப் பொழிவும், 04.12.2023 அன்று மாலை புயலின் தாக்கமும் இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து இன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூட்டத்தில் 15 மண்டலங்களில் உள்ள மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், தலைமைப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி/இளநிலைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

மழை மற்றும் புயலை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், கூடுதலாக மோட்டார் பம்புகள் தேவைப்படும் இடங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. மண்டலங்கள் வாரியாக கூடுதலான மோட்டார் பம்புகள் தேவைப்படும் அனைத்து இடங்களுக்கும் இன்று இரவிற்குள் மோட்டார் பம்புகள் வழங்கப்படும். குறிப்பாக மாதவரம், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் பெருங்குடி ஆகிய மண்டலங்களில் அதிகளவில் கூடுதலாக மோட்டார் பம்புகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**கூடுதல் பணியாளர்கள் - மீட்புக் குழுவினர்!**

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 23,000 பணியாளர்கள் களப்பணியாற்றி வருகின்றனர். மழைக்காலத்தினை முன்னிட்டு மண்டலத்திற்கு கூடுதலாக 10 பணியாளர்கள் வீதம் 200 மண்டலங்களுக்கும் 2000 கூடுதல் பணியாளர்கள் நியமித்து பணிபுரிந்து வருகின்றனர். இரவு நேரங்களில் 16,000 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், மாநில பேரிடர் மீட்புக் குழுவைச் சார்ந்த 100 பணியாளர்கள் மற்றும் மாநில பேரிடர் மீட்புக் குழுவைச் சார்ந்த 25 பணியாளர்கள் தயார்நிலையில் உள்ளனர்.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிவாரண மையங்கள் தேவைப்படும் இடங்களுக்கு நிவாரண மையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு தங்கும் பொதுமக்களுக்கு உணவு வழங்க உணவு தயாரிக்கும் மையங்களை தயார்நிலையில் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைக்காலத்தில் பணிகள் மேற்கொள்வதற்காக கடந்த ஆண்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ரூ.5 இலட்சம் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்பொழுது ஒவ்வொரு மண்டலத்திற்கும் ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. உணவு வழங்குதல், கூடுதலாக மர அறுவை இயந்திரங்கள், மோட்டார் பம்புகள் போன்ற எதிர்பாராத தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் ரூ. 20 இலட்சம் முன் பணமாக வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களது குறைகளைத் தெரிவிப்பதற்காக 1913 என்ற உதவி எண்ணில் 15 இணைப்புகளுடன் செயல்பட்டு வந்த நிலையில் தற்போது 30 இணைப்புகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு வாரியாக பழைய, விழும் நிலையில் மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது என மேயர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், தலைமைப் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பம்மல் மீனம்பாக்கம் பகுதிகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்ட பயனாளிகள் புதிய அட்டை பதிவு செய்யும் சிறப்பு முகாமை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி துவங்கி வைத்தார் அப்போது கழக தீர்மான குழு செயலாளர் மீ. ஆ வைத்திலிங்கம், தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டல தலைவர் வே. கருணாநிதி, மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துகள்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, டிச. 3-

அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும்,தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள், நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு.

இந்திய திருநாட்டிலேயே முதன்முறையாக முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் ஊனம் என்ற சொல்லை நீக்கியும், அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் என பெயர் வைத்து மகுடம் சூட்டினார். மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துறை கண்டு தனி நலவாரியம் அமைத்து தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு அவர்கள் வாழ்வு சிறக்க வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வந்தார் என்பதை இன்றும் நன்றியுணர்வுடன் நினைவு கூருகிறோம்.

இந்நிலையில் தலைவர் தளபதி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதுடன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துகொண்டும், முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையை உயர்த்தி வழங்கினார்.

நலவாரியம் மூலம் வழங்கப்பட்டு வந்த திருமண உதவித்தொகை, விபத்து நிவாரணத்தொகை, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட நலவாரியம் சார்பாக வழங்கப்படும் அனைத்து உதவித்தொகைகளும் இரண்டு மடங்கு உயர்த்தி வழங்கிட அரசாணை பிறப்பித்தார்.

இரண்டுகால் பாதிப்பு ஏற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த இணைப்பு சக்கர ஸ்கூட்டியை, ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தி வழங்கிட ஆணை பிறப்பித்தார்.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பில் 4 சதவீதம் இட ஒதுக்கீடு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் சிறப்பு தேர்வு, வீடு இல்லாத மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடு, இலவச பட்டா, கல்வி உதவித்தொகை இருமடங்கு, நகராட்சி நிர்வாகத்துறை மூலம் பெருநகரம் மாநாகராட்சி, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள், உள்ளாட்சிகள் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் இட ஒதுக்கீடு செய்தல், மற்றும் சாலை ஓரங்களில் (பிளாட்பாரங்களில்) கடை வைத்திட சிறப்பு அனுமதி வழங்குதல், இந்து அறநிலையத்திற்குட்பட்ட திருக்கோவில்களில் இலவச திருமணங்கள், சீர்வரிசைகள் வழங்குதல், கூட்டுறவுத் துறையின் செயல்படும் வங்கிகளில் சுயதொழில் செய்திட வங்கிகடன், பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோர், வாய்பேசமுடியாதோர் மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன கைபேசி, நவீன ஒளிரும் மடக்கு குச்சி, நவீன செயற்கை கால், பள்ளி, கல்லூரிகளில் 4 சதவீதம் இட ஒதுக்கீடு, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை பராமரிக்கும் அவரது தாய், தந்தையரின் வருமானத்தை ஈட்டுவதற்கு பெற்றோர்களுக்கு நவீன தையல் இயந்திரம், தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் சிறப்பு, பள்ளி ஆசிரியர்களுக்கு இரண்டு மடங்கு ஊதியம் வழங்குதல் போன்றவற்றை வரலாற்று திட்டங்களை வழங்கி மாற்றுத்திறனாளிகளின் சிரிப்பில் முத்தமிழறிஞர் கலைஞரை கண்ட முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களுக்கு அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கம் சார்பாக கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், அரசு துறைகளில் பணியாற்றும் மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வு பெற டி.என்.பி.எஸ்.சி மூலம் நடத்திடும் துறைத் தேர்வுகளில் (Department Exam) மாற்றுத்திறனாளிகள் பங்கேற்று தேர்ச்சி பெற முடியாத நிலையில் கஷ்டப்படுகிறார்கள். இதனால், அரசு பணிகளில் பணியாற்றும் மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வு பெற முடியாத நிலை உள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக முதலமைச்ச ருக்கு நன்றியினையும், மாற்றுத்திறனாளிகள் சமூகத்திற்கு வாழ்த்துகளையும் தெரிவித்து அதன் மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை விடுத்துள்ளார்.



56வது தேசிய நூலக வார விழாவை முன்னிட்டு சென்னை கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குஉட்பட்ட ஜவஹர்நகர் நூலகம், மற்றும் சென்னை மாவட்ட லயன்ஸ் கிளப் இணைத்து இளம்மாணவர்களுக்கான பேச்சு போட்டி, கதை சொல்லுதல், ஓவிய போட்டி, மாறுவேட போட்டிகளை நடத்தி வெற்றி பெற்ற கொளத்தூர் தொகுதி மாணவ மாணவிகளுக்கு கழக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் நூலக நிர்வாகிகள், லயன்ஸ் கிளப் கவர்னர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.